# சீஷத்துவத்தின் சாலையில் [9:1–9; 22:4–11; 26:9–19]

இந்தப் பாடத்திலும், அடுத்துவரும் பாடத்திலும் நாம், "வரலாற்றில் மிகவும் புகழ் பெற்ற மனமாற்ற நிகழ்ச்சி" மற்றும் "மனித வரலாற்றில் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று" என்று கருதப்படும் - தர்சுப் பட்டணத்தைச் சேர்ந்த, வெறுக்கத் தக்க நிலையிலிருந்த சவுலின் மனமாற்றம் பற்றிய - வரலாற்றைப் படிக்கப் போகின்றோம். சவுலின் மனமாற்றத்தைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் மூன்று அதிகாரங்களில் கூறப்படுகின்றது. அதில் நடந்த நிகழ்ச்சிகள் அதிகாரம் 9 லும், அந்த அப்போஸ்தலரே அதைப் பற்றிக் கூறும் விஷயங்கள் அதிகாரம் 22 மற்றும் 26 லும் இடம் பெற்றுள்ளன.[1] முழு வரலாற்றையும் நாம் பெறுவதற்கு இந்த மூன்று அதிகாரங்களையும் ஒன்று சேர்ப்போம்.

## அசைக்க முடியாத ஒரு திட நம்பிக்கை (9:1, 2; 22:4, 5; 26:9-12)

சவுலுக்குள் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்து பாராட்டு வதற்கு, நாம் அவரது மனமாற்றத்திற்கு முந்திய வாழ்க்கையைப் பற்றி அறிவது தேவை. அவரது எழுத்துக்கள் மற்றும் பிரசங்கங் கள் ஆகியவற்றில் அவர் தம்மைப் பற்றிக் கூறும் குறிப்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும்போது, எல்லா கிறிஸ்தவர்களும்[2] அழிக்கப்பட வேண்டும் மற்றும் இயேசுவின் நாமமானது இந்த பூமியிலிருந்து அழிக்கப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத திட நம்பிக்கையுடன் இருந்த துன்புறுத்தும் இளைஞன் ஒருவனின் உருவமே அதிலிருந்து வெளிப்படுகின்றது.

சிலிசியாவில் இருந்த ரோமக் குடியேற்றப் பட்டணங்களில் ஒன்றான, ''கீர்த்தி பெற்ற''[3] தர்சுப் பட்டணத்தில் யூதப்

பெற்றோர்களுக்கு சவுல் பிறந்தார். அவரது குடும்பமானது மிகச் சிறிய பென்யமின் கோத்திரத்திலிருந்து வந்ததாகும் (பிலி. 3:5); அவரது பெற்றோர், தங்கள் இனத்திலேயே மிகப் புகழ் பெற்ற பிரதிநிதியாக இருந்த சவுல் அரசனுடைய[4] பெயரை அவருக்குச் சூட்டினார்கள். தர்சுப் பட்டணத்தானாகிய சவுல் தனது குடும்பத்திலிருந்து செல்வம், ரோமக்குடியுரிமை மற்றும் யூத விசுவாசத்தின் மேல் அக்கினியாய்ப் பற்றியெரியும் அன்பு ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டார்.[5] அவர் யூத மார்க்கத்தின் "கண்டிப்பான சமயமாகிய" (26:5) பரிசேயத்துக்கு (23:6) இசைந்தபடி வளர்க்கப்பட்டார்.

சவுல் தமது குழந்தைப் பிராயத்தைத் தர்சுப் பட்டணத்தில், தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதிலும்[6] ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதிலும்[7] செலவிட்டார். அவர் இளைஞராயிருந்த போதே, எருசலேமுக்கு அனுப்பப்பட்டு[8] யூத மார்க்கத்தில் புகழ் பெற்ற போதகராகிய கமாலியேலின் (22:3) பாதத்தில் அமர்ந்து கற்றுக் கொண்டார். பகுத்தறியும் சிந்தை, உறுதியான வைராக்கியம் மற்றும் களைப்பற்ற வலிமை (பிலி. 3:6) ஆகிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்த அவர், யூத சமூகத்தில் இருந்தவர்களிடையே மிகவும் வேகமாக வளர்ந்த வராயிருந்தார் (கலா. 1:14). அவர் சனகெரீன் சங்கத்தின் உறுப்பினராயிருந்திருக்கலாம். அப்படியிருந்தாலும், இல்லா விட்டாலும், அவர், "எருசலேமில் இருந்த இளம் பரிசேயர்களில் மிகவும் நம்பிக்கை தரக் கூடியவராயிருந்து, யூத விசுவாசத்தில் மாபெரும் தலைவராகக் கூடிய பாதையில் இருந்தார்" என்று வாரன் வயர்ப்ஸ் விளக்கமளிக்கிறார்.

அவர் இன்னும் தமது முப்பது(வயது)களில் இருந்த போதே, தாம் அன்பு காட்டிய யூத மார்க்கமானது வழுவிச் செல்லும் செயல்பாட்டினால் பயமுறுத்தப்படுவதைக் கண்டார்.[9] அவருடைய சக யூதர்களில் ஆயிரக்கணக்கானோர், மோசேயின் பிரமாணத்தின் மேலுள்ள விசுவாசத்தை விட்டு விட்டு, புகழ் எதுவுமில்லாத கலிலேயத் தச்சரான இயேசு என்ற பெயருடைய வர் மேல் விசுவாசம் கொள்ளத் தொடங்கினார்கள். ஆசாரியர் களில் அநேகரும் கூட இந்த மாறுபட்ட கருத்தினால் பீடிக்கப் பட்டிருந்தார்கள் (6:7). குற்றம் சாட்டப்பட்டு, சிலுவையி லறையப்பட்ட ஒரு குற்றவாளியை எவரொருவரும் எப்படிப் பின்பற்றக் கூடும் என்பதை அவரால் புரிந்து கொள்ளவே

*முடியவில்லை. "மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன்" (கலா. 3:13; உபா. 21:22, 23 ஐக் காணவும்) என்று பிரமாணம் கூறவில்லையா?*

*அவருடைய அறிவுரையாளராகிய கமாலியேல், பறந்து விரியும் இந்த இயக்கத்தை அமிழ்த்துவதற்கு வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது என்று கண்டனம் செய்திருந்தார், ஆனாலும் யூதமும், கிறிஸ்தவமும் ஒரே வேளையில் இருக்க முடியாது என்பது சவுலுக்குத் தெளிவாகியிருந்தது. யூத மார்க்கம் பறந்து விரிய வேண்டுமென்றால், கிறிஸ்தவ மார்க்கமானது அழிக்கப்பட வேண்டியதாயிருந்தது! எருசலேமி லிருந்த அரசியலதிகாரத்தினால் வலிவூட்டப்பட்ட அவர், யூத மார்க்கத்தின் இருதயத்தையே அரித்துக் கொண்டிருந்த ஆபத்தான இந்தக் கட்டியை நீக்கிப்போடுவதற்கு மிகப் பெரிய மக்கள் கூட்டத்தின் ஆதரவுடன் ஒரு இயக்கத்தை நடை முறைப்படுத்தி வந்தார். தம்மை விழுங்கிப்போட்ட இந்த ஆட்டிப் படைக்கும் எண்ணம் பற்றி அவரே பின்னாளில் கீழ்க்கண்டவாறு எழுதினார்:*

> *நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன் (22:4).*
>
> *... ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, ... அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து ... (22:20).*
>
> *... பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன் (26:10).*
>
> *... தேவனுடைய சபையை நான் மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கி (கலா. 1:13).*

*சவுலின் பிரயாசங்களினால் எத்தனை கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதைக் கர்த்தர் மட்டுமே அறிவார்.*[10]

*இயேசுவைப் பின்பற்றியவர்கள் எருசலேமிலிருந்து தப்பியோடியபோது (8:1), இந்த விசுவாச விலக்கம் நசுக்கப் பட்டு விட்டதாகச் சவுல் எண்ணியிருக்க வேண்டும். பிறகு, இயேசுவின் சீஷர்கள் சென்ற இடங்களில் எல்லாம் தங்களின் விசுவாசத்தைப் பரப்பிக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது*

*(8:4). குறைந்த அளவு ஊக்குவிக்கப்பட்டவராயிருப்பவர் இவ்விடத்தில் தோல்வியை ஒப்புக் கொண்டிருக்கலாம் - ஆனால் சவுல் அப்படிப்பட்டவராயிருக்கவில்லை! இந்தக் கிறிஸ்தவர்களை முற்றிலுமாகப் பாதை மாறச் செய்யும்படி சவுல் தீர்மானித்தார்! இந்த முறை அவர்கள் தப்பிக்கவே முடியா திருந்தது!*

*சவுலின் உபாயமானது அநேக சட்டக் கோட்பாடுகளைச் சார்ந்ததாயிருந்தது: (1) யூதர்களின் சட்ட முறைமையின்படி, உலகெங்கும் இருந்த யூதர்கள், பிரதான ஆசாரியரின் அதிகாரத் திற்குக் கீழ்ப்பட்டவர்களாயிருந்தார்கள் (ஆகவே, பிரதான ஆசாரியரிடமிருந்து வரும் ஒரு கடிதமானது மிகவும் கனத்துக் குரியதாய் இருந்தது). (2) ரோம சட்டத்தின் கீழ், கிறிஸ்தவர்கள், சட்டப்படி யூதர்களாக - மதத்தைத் துறந்து சென்ற யூதர்களா யிருந்த போதிலும், யூதர்களாகவே கருதப்பட்டனர். (யூத அதிகாரிகள், யூத கிறிஸ்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்போது, ரோமர்கள் அதைப்பற்றி அதிகம் கவலைப் படுவதில்லை.)*

*பிரதான ஆசாரியர் (9:2; 22:5), ஆலோசனைச் சங்கத்தார் (22:5) மற்றும் இருந்த யூத அதிகாரிகள் (26:10, 12) ஆகியோரிட மிருந்து பெற்ற நிருபங்கள் என்ற ஆயுதம் தரித்தவராய், சவுல் ஆயுதமேந்திய தமது மனிதர்களின் கூட்டத்தை "அந்நிய பட்டணங்கள்"[11] வரைக்கும் வழி நடத்திச் சென்றார். உள்ளூர் ஜெப ஆலய அதிகாரிகளின் உதவியுடன், அவர் இயேசுவைப் பின்பற்றுபவர்களைச் சுற்றி வளைத்து, அவர்களைத் தண்டிக் கும்படியாக எருசலேமுக்கு இழுத்து வந்தார்.*

*அதிகாரம் 9ன் தொடக்கத்தில், சவுல் தமது மிக முக்கியமான நோக்கம் கொண்ட - பழங்காலப் பட்டணமாகிய தமஸ்குவுக் குச் செல்லும் - பிரயாணத்திற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்.*

> *சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி[12] சீறிப் பிரதான ஆசாரியரி டத்திற்குப் போய்:[13] [ஆலோசனை சங்கத்தாரிடமும் போய்] அவர்களிடம் இந்த மார்க்கத்தாராகிய[14] புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் (9:1, 2).*

*எருசலேமிலிருந்து வடக்கு - வடகிழக்குத் திசையில்*

சாதாரணமாகப் பயணம் பண்ணக் கூடிய தூரத்தில் - சுமார் 140 மைல் தூரத்தில் - இருந்த தமஸ்குப் பட்டணம் ஏராளமான மக்கள் தொகை கொண்ட பட்டணங்களில் ஒன்றாக இருந்தது. எருசலேமிலிருந்து நடைபயணமாகச் சென்றால், ஏறக்குறைய ஒரு வார காலத்தில் இங்கு சென்று சேரலாம்.

இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கையில்[15] சவுலின் இருதயத்தில் எழுந்த கிளர்ச்சிகளைப் பற்றி விளக்கவுரை யாளர்கள் சுதந்திரமாகக் கற்பனை செய்திருக்கின்றார்கள், ஆனால் நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். வைராக்கிய மிகுந்த இந்த இளைஞர், இந்தப் பயணத்தின் போது அதிக மாய்ச் சிந்திக்க வேண்டியிருந்தது:[16] ஸ்தேவானின் வல்லமை யுள்ள பிரசங்கம் மற்றும் அவர் மரணமடைந்த வழி, உபத்தி ரவத்தைச் சந்தித்த போதிலும் இயேசுவைப் பின்பற்றியவர்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டது, மற்றும் கிறிஸ்தவமானது தேவனிடத்திலிருந்து வந்ததாயிராவிட்டால் அது தானாகவே மடிந்து விடும் (கிறிஸ்தவமானது மரிப்பதற்கான எந்த அடையாளத்தையும் இதுவரை காண்பித்ததில்லை!) என்ற கமாலியேலின் வாதம். அதே வேளையில், இந்த அப்போஸ்தலர் மனம் மாறுவதற்கு முன்னிருந்த தமது நிலை பற்றி தாமே கூறியுள்ளவற்றையும் நாம் கவனப்படுத்த வேண்டும்:

> *சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் (23:1).*
>
> *... என் முன்னோர்கள் முதற் கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை ... (2 தீமோ. 1:4).*
>
> *முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் (26:9)*

பவுல் தமக்கு நேர்ந்தவைகள் யாவும் மனமாற்றத்தின் தருணத்திற்கே தம்மை வழிநடத்தியதாகப் பின்னாளில் முடிவு செய்தது கலாத்தியர் 1:15ல் மறைமுகமாய்க் காணப்படுகின்றது, ஆனாலும், கிறிஸ்து அவருக்குத் தரிசனமாவதற்கு முன்பு அவர் மனச்சாட்சியினால் குத்தப்பட்டார் என்று சித்தரிப்பதானது, விஷயத்தை மிகைப் படுத்திக் கூறுவதாகும். பயணத்தின்

துவக்கத்தில் இருந்தது போலவே சவுல் தமது பயணத்தின் முடிவு வரையிலும் (இயேசுவைத் தரிசிக்கும் வரையிலும்) அசைக்க முடியாத திட நம்பிக்கையால் நிறைந்தவராகவே இருந்தார். கண்டனம் பண்ணும் மனச்சாட்சியின் விளைவாக அல்ல, பரிவிரக்கம் உள்ள கிறிஸ்துவினாலேயே அவர் மனமாற்றம் அடைந்தார்!

## எதிர்பாராத ஒரு சந்திப்பு (9:3-5; 22:6-8; 26:13-15)

பயணத்தின் கடைசி நாளில் மத்தியான வேளை நெருங்கிக் கொண்டிருந்தது. தமஸ்குப் பட்டணத்தின் சுற்றுச் சுவர்கள் கண் காணும் தொலைவில் இருந்தன. மத்தியான வேளைகளில் சூரியனின் எரிக்கும் வெய்யிலில் இருந்து தப்பிப்பதற்காகப் பயணிகள் சாதாரணமாக ஓய்வெடுப்பதுண்டு; ஆனால் கொலை செய்யும்படியான தனது தேடுதலைத் தொடங்க ஆர்வமாயிருந்த சவுல் தமது குழுவை விரைந்து முன் செல்லும்படி வற்புறுத்தினார். பிறகு, திடீரென்று அவருடைய உலகமானது தலை கீழாகப் புரட்டப்பட்டது.

> *அவன் பிரயாணமாய்ப் போய் [மத்தியான வேளையிலே[17]] தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியாய் வானத்திலிருந்து [பிரகாசமுள்ள[18]] ஒரு ஒளி [சூரியனைக் காட்டிலும் பிரகாசம் உள்ளது[19]] அவனைச் சுற்றிலும் [அவனோடு பயணம் செய்தவர்களைச் சுற்றிலும்[20]] பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: "சவுலே, சவுலே,[21] நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று [எபிரெய ஜென்ம பாஷையிலே[22]] தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் [முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்[23]] (9:3, 4).*

பிரகாசமான அந்த ஒளியானது சந்தேகம் எதையும் விட்டு வைக்கவில்லை: இது பரலோகத்திலிருந்து வந்த ஒரு தரிசனமாயிருந்தது! சவுலால் ஒரு மனிதரைப் பார்க்க முடிந்தது,[24] ஆனால் உடனடியாக அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவர் யார்? அவர் உபத்திரவப்படுத்தப்படுவது பற்றி ஏன் பேசினார்? சவுல் பயத்துடன், "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்டார். "நீ துன்பப்படுத்துகிற [நசரேயனாகிய][25] இயேசு நானே" (9:5) என்று பதில் திரும்ப வந்தது.

*வேதாகமத்தின் அற்புதங்களை மறுக்கின்றவர்கள், சவுல் கர்த்தரைத் தரிசிக்கவில்லையென்றும், மாறாக ஒரு மின்சாரப் புயலின் காரணமாக, அவர் ஒரு வலிப்பினால் தாக்கப் பட்டார் என்றும் கூறுகின்றார்கள்! (இப்படி நடந்திருந்தால், எல்லா மக்களும் மின்சாரப் புயலின் காரணமாக, வலிப்பு நோயால் தாக்கப்பட வேண்டுமென்று நாம் ஜெபிக்க வேண்டும் - அது போன்ற ஒரு அனுபவமானது அவர்களை இயேசுவுக்கென்று வைராக்கியமுள்ள ஊழியக்காரர்களாக்குமே!) இப்படிப்பட்ட யோசனை எவ்வளவு மதியீனமானது! பவுலின் நிருபங்களைப் படிக்கும் எவரும், அவர் இப்படிப்பட்ட மாயத்தோற்றங் களுக்கு அப்பாற்பட்ட அறிவுடைமையுடனிருந்தார் என்ற உண்மையினால், அவர் மீது நல்மதிப்புக் கொண்டேயாக வேண்டும். அவர் சரீரப் பிரகாரமான ஒரு உபத்திரவத்திற்கும், பரலோகத்தின் ஒரு தரிசனத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிந்தவராகவே இருக்க வேண்டும்! மேலும், சவுலுடன் பிரயாணம் செய்த யாவரும் தரையிலே விழுந் தார்கள். அவர்களும் ஒன்றுபோல வலிப்பு நோயினால் தாக்கப் பட்டார்களா? இன்னும் சற்று மேலாக, வலிப்பு நோயின் அறிகுறிகளை நன்கு அறிந்திருந்த மருத்துவரான லூக்கா, உண்மையில் நடந்ததை விளக்கினார்: உயிர்த்தெழுந்த கர்த்தர் சவுலுக்குத் தரிசனமாகி, "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்று கூறினார்![26]*

*திகைக்க வைக்கும் இந்த அறிவிப்பினால் சவுலின் மனதில் கரைபுரண்டோடிய சிந்தனைகளைக் கற்பனை செய்து பாருங்கள்: இயேசுப் பின்பற்றியவர்கள், அவர் மரித்தவரா யில்லை, உயிருடனிருக்கிறார் என்று அறிவித்திருந்தார்கள் - அவர்கள் கூறியது சரியே! அவர் தெய்வீகமானவர் என்பதாக அவர்கள் உரிமை கோரினார்கள் - அவர் அப்படிப்பட்ட வராகவே இருக்க வேண்டும்! அவர்கள் சரியானவர்களா யிருந்தார்கள், அவர் (சவுல்) தவறானவராயிருந்தார் - மிகவும் தவறானவராயிருந்தார்! தாம் அன்பு காட்டிய தேவனுக்காகப் போராடுவதற்குப் பதிலாக, தாம் தேவனுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்திருக்கின்றார்!*

*இயேசுவைப் பின்பற்றியவர்களைச் சவுல் உபத்திரவப் படுத்தியிருந்தாலும், பரலோகத்திலிருந்து தரிசனமானவர், கிறிஸ்துவின் சீஷர்களைச் சவுல் உபத்திரவப்படுத்திய*

போதெல்லாம், உண்மையில் அவரையே (கிறிஸ்துவையே) உபத்திரவப்படுத்தியிருந்ததாக வெளிப்படுத்தினார்! கிறிஸ்தவர்களைக் கைது செய்தபோது அவர் கிறிஸ்துவையே கைது செய்தார்! கிறிஸ்தவர்களை வாதித்தபோது அவர் கிறிஸ்துவையே வாதித்தார்! கிறிஸ்தவர்களைக் கொலை செய்தபோது அவர் தேவனுடைய குமாரனையே கொலை செய்தார்![27]

''நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி'' சவுல், தம்மையே தாம் "குற்றஞ் சாட்டப்படாதவர்" என்று பெருமை பாராட்டியிருந்தார் (பிலி. 3:6); இப்பொழுதோ அவர் தம்மை "பிரதான'' பாவியென்று கண்டார் (1 தீமோ. 1:15)! அவர் நடுக்கத்துடன், "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் (22:10). நம்பிக்கை ஏதாவது இருந்ததா?

## வழக்கமற்ற ஒரு அறைகூவல் (9:6-9; 22:9-11; 26:16-18)

கர்த்தருடைய தரிசனத்தைப் போலவே அவரது பதிலும் திகைப்புக்குரியதாகவே இருந்தது. சவுல் தரையிலே ஒடுங்கியிருப்பதை நிறுத்தும்படி இயேசு கூறினார்:

> இப்பொழுது நீ எழுந்து, காலூன்றி நில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும்[28] குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும்[29] ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும், அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி,[30] அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் (26:16-18).[31]

இதைக்காட்டிலும் பெரிய அறைகூவல் எப்பொழுதும் கொடுக்கப்பட்டதேயில்லை! இயேசு சவுலுக்கு ஏன் தரிசனமானார் என்பது பற்றிக் கல்வியாளர்கள் வாதிட்டுக் கொண்டிருக்கின்றார்கள், ஆனால் கர்த்தரே, தமது காரணத்

*தைக் கொடுத்தார்: "இந்த நோக்கத்திற்காக நான் உனக்குத் தரிசனமானேன்" (வ.16) என்று அவர் சவுலினிடத்தில் கூறினார். இந்த நோக்கமானது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட முடியும்.*

*முதலாவது, சவுலை ஒரு சாட்சியாகத் தகுதிப் படுத்து வதற்காக இயேசு அவருக்குத் தரிசனமானார் - "உன்னை ஊழியக்காரனாகவும், சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக" (26:16). உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருக்க வேண்டும் என்பது அப்போஸ்தலராயிருப்பதற்கான தகுதியாம்சங்களில் ஒன்று ஆகும் (1:21, 22). பின்னாளில், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனங்களைப் பவுல் அட்டவணைப்படுத்தும் போது, "எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்" (1 கொரி. 15:8, 9) என்று கூறினார். அதே சபைக்கு அவர், "நான் அப்போஸ்தலனல்லவா? ... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்க வில்லையா?" என்றும் எழுதினார் (1 கொரி. 9:1).*

*இரண்டாவது, சவுலைப் புறஜாதியாருக்கு ஒரு சாட்சி யாகத் தகுதிப்படுத்துவதற்காக இயேசு அவருக்குத் தரிசனமானார் - இயேசு, "உன்னைப் புறஜாதியாரிடத்திற்கு அனுப்புகிறேன்" (26:17, 18) என்று கூறினார். பவுல் "உலக முழுவதற்குமான அப்போஸ்தலர்" என்று அழைக்கப்படுகின் றார்; ஆனால் அவருடைய ஊழியமானது புறஜாதியாருக்காவே விசேஷித்த விதமாய் செய்யப்பட்டது. இவ்விடத்தில்தான், கர்த்தருடைய முன் திட்டத்தில் புறஜாதியாரும் உள்ளடக்கப் பட்ட விஷயமானது முதன் முறையாக தெளிவாகக் கூறப்பட்டது. "பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (1:8) என்ற இயேசுவின் அறைகூவலில் புறஜாதியாரும் உள்ளடக்கப்பட்டிருந்தார்கள் என்பதை நீங்களும் நானும் அறிகின்றோம். "வாக்குத்தத்தமானது ... தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" (2:39) என்ற பேதுருவின் கூற்றிலும் புறஜாதியார் உள்ளடக்கப்பட்டிருந் தனர். 3:25ல் பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்ட, ஆபிரகாமுக்குத் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தில் புறஜாதி யாரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்: "உன் சந்ததியினாலே பூமி யிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." ஆயினும்,*

*கர்த்தர் சவுலுக்குத் தரிசனமாகும் வரையிலும் புறஜாதியார் விசேஷமாகக் குறிப்பிடப்படவில்லை. யூதரல்லாதவர்களாகிய நமக்கு இந்தத் தருணமானது கொண்டாடத் தக்கதாகும்!*

*மூன்றாவது, சவுல் புறஜாதியாருடைய "கண்களைத் திறக்கும்படிக்கு" அவரை ஒரு சாட்சியாகத் தகுதிப்படுத்து வதற்காக இயேசு அவருக்குத் தரிசனமானார் (22:18). ஆத்தும ஆதாய முயற்சியின் மாபெரும் வேதவசனக் கூற்றுக்களில் ஒன்றாக வசனம் 18 விளங்குகின்றது. ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் என்ற வகையில், நமது பணியானது ஐந்து விஷயங்களை உள்ளடக்கியிருக்கின்றது: "*[1] [*பாவிகளின்*] *கண்களைத் திறத்தல்,* [2] *அவர்கள் இருளிலிருந்து ஒளிக்குத் திரும்பும்படி செய்தல்,* [3] *சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து அவர்களை தேவனுடைய அதிகாரத்திற்குத் திரும்பச் செய்தல்,* [4] *அவர்கள் பாவமன்னிப்புப் பெறும்படி செய்தல், மற்றும்* [5] [*இயேசுவைப்*] *பற்றும் விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களுடன் அவர்களும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும்படி செய்தல்" (26:18).*

*சவுலைப் புறஜாதியாருக்கு அப்போஸ்தலராக்குவதே இயேசு அவருக்குத் தரிசனமானதின் நோக்கமாகும்! ஆம், இயேசுவின் தரிசனமானது சவுலின் இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கி, மனந்திரும்புதலின் செயல்பாட்டைத் தொடங்கி வைத்தது, ஆனால், சவுலை இரட்சிப்பதற்காகவல்ல, புறஜாதியாருக்கு ஒரு சாட்சியாக அனுப்புவது என்ற தனிச் சிறப்பான நோக்கத்திற்காகவே தாம் அவருக்குத் தரிசனமான தாக இயேசு கூறினார். சவுல் (பவுல்) பின்னாளில் ரோமர் 11:13ல், "... புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனா யிருக்கிறதினாலே ..." என்று எழுதினார் (கலா. 2:6-9 ஐயும் காணவும்).*

*இயேசு தரிசனமான வேளையில் சவுல் இவை எல்லா வற்றையும் புரிந்திருந்தாரா? எனக்கு இதில் சந்தேகமாய் இருக்கின்றது. இயேசு உண்மையிலேயே மேசியாவாக இருக்கின்றார் - தாம் எதிர்த்து நின்றவர் தேவனுடைய குமாரனாகவே இருக்கின்றார் என்ற எண்ணமே அவரது சிந்தனையில் மேலோங்கிய எண்ணமாக இருந்திருக்க வேண்டும்! "நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியே அவருக்கு மிகவும் அக்கறைக்குரியதாய் இருந்திருக்க வேண்டும்.*

இயேசு, "நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது[32] அங்கே உனக்குச் சொல்லப்படும்" (9:6) என்று கூறி முடித்தார்.

இவை எல்லாம் நடந்து கொண்டிருக்கையில், "அவனுடனே [சவுலுடனே] கூடப் பிரயாணம் பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்''[33] (9:7). அவர்கள், ''வெளிச்சத்தைக் கண்டு, பயமடைந்தார்கள்; ... பேசினவருடைய சத்தத்தையோ அவர்கள் கேட்கவில்லை.''[34] சாலையில் வழக்கமற்ற ஒன்று நடந்தது என்பதற்கு இந்த மனிதர்கள் மதிப்புமிக்க சாட்சி களாய் இருந்தார்கள்.

பிறகு, "சவுல் தரையிலிருந்தெழுந்து தன் கண்களைத் திறந்த போது [அந்த ஒளியின் மகிமையினாலே[35]] ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது [அவனுடைய பயணத் துணை யாளர்கள்] கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்" (9:8).தேவனுடைய பழி வாங்குதலின் முகவராக சவுல் தமது முழு பெலத்தையும் தமஸ்குவில் காண்பிக்கும்படி எதிர்பார்த்திருந்தார், அதற்கு மாறாக, துக்கப்படும் ஒரு பாவியாக, உதவியற்ற, பார்வை யில்லாத ஒரு பிச்சைக்காரர் போல நகருக்குள் அவர் வழி நடத்திக் கொண்டு போகப்பட்டார்.

தமஸ்குப் பட்டணத்தின் முக்கிய தெருக்களில் ஒன்றான நேர்த்தெருவு[36] என்ற பெயருள்ள தெருவுக்குச் சவுல் வழி நடத்தப்பட்டுத் தடுமாறிச் சென்றார், அந்தக் குழு யூதா என்னும் பெயருடையவர் வீடு வரை வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த விருந்தினர் அறையொன்றில் அவர் தனித்து விடப்பட்டார். கன்னங்களில் கண்ணீர் வழிந்து ஓடிய நிலையில், அவர் முழங்காலிலிருந்து ஜெபிக்கத் தொடங்கினார் (9:11). ''அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்" (9:9).

மனச்சாட்சியின் உறுத்தலினால் மேற்கொள்ளப்பட்ட மனிதனின் காட்சியாக இது இருக்கின்றது. இப்பொழுது சவுல், கிறிஸ்துவில் விசுவாசமுடையவராக, மனம் வருந்தியவராக, இயேசுவை "ஆண்டவரே"[37] என்று அறிக்கையும் செய்தவராக ஆனால் பாவத்தின் குற்ற உணர்வு இன்னும் அவரது ஆத்துமாவைத் தின்று கொண்டிருந்த நிலையில் இருந்தார்.

அவர் ஒரு தரிசனத்தைப் பெற்றிருந்தார், ஆனால் அவர், "என்ன செய்ய வேண்டும்" (9:6) என்று கூறும்படிக்கு[38] ஒருவர் வந்து அவரைச் சந்திப்பது தேவையாயிருந்தது.

## முடிவுரை

அந்த சந்திப்பைப் பற்றிக் காணவும், கொடுக்கப்பட்ட அறிவுரைகளைக் கேட்கவும் நாம் அடுத்த பாடம் வரையில் காத்திருக்க வேண்டும். இந்தப் பாடத்தில் நாம், (1) அசைக்க முடியாத ஒரு திட நம்பிக்கை (கிறிஸ்தவத்தை ஒழிக்க வேண்டும் என்ற சவுலின் திட நம்பிக்கை), (2) எதிர்பாராத ஒரு சந்திப்பு (சாலையில் இயேசு அவருக்குத் தரிசனமானது) மற்றும் (3) வழக்கமற்ற ஒரு அறைகூவல் (புறஜாதியாருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்லும்படி இயேசு அவருக்கு அறைகூவல் விடுத்தது) ஆகியவற்றைக் கண்டிருக்கின்றோம். அடுத்து நாம், (4) ஆர்வமில்லாத ஒரு கிறிஸ்தவர் (சவுலினிடம் போவதற்கு மறுத்த அனனியா) மற்றும் இவருக்கு முரண்பாடாயிருந்த (5) தயக்கமற்று மனம் மாறியவர் (என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்ட உடனே கீழ்ப்படிந்த சவுல்) ஆகியோரைக் காண்போம். மேலும் நாம் (6) மனம் மாறிய அவரின் (கிறிஸ்துவுக்காக) அழிவற்ற ஒப்புக்கொடுத்தல் பற்றியும் ஒரு வார்த்தை கூறுவோம்.

இதை முடிக்கின்ற இவ்வேளையில், உங்கள் சொந்த ஆவிக்குரிய "தமஸ்குவுக்குச் செல்லும் சாலையைப்" பற்றிய உண்மையைக் கவனித்துப் பாருங்கள். பார்வையற்றுப் போகச் செய்யும் ஒரு ஒளியில் கர்த்தர் உங்களுக்குத் தரிசனமாகப் போவதில்லை, ஆனால் தேவ வசனத்திலிருந்து வரும் ஒளி யானது, நேர்மையான எந்த இருதயத்திலும் விசுவாசத்தை உண்டாக்கப் போதுமானதாயிருக்கின்றது (யோவா. 20:30, 31). தேவனுடைய சுவிசேஷத்தின் அழைப்பை நீங்கள் எதிர்த்து நின்று கொண்டிருந்தால், நிச்சயமாகவே அது "முள்ளின் மேல் உதைக்கின்றதாகவே" இருக்கும். நீங்கள் தவறு செய்தவர்களா யிருக்கின்றீர்கள் என்று ஒப்புக்கொள்வதென்பது உங்களுக்குக் கடினமானதாயிருக்கலாம்; சவுல் செய்தது போலவே நீங்களும் ஏராளமானவற்றை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கலாம். இன்னமும் நீங்கள் எதிர்த்து நிற்காமல், சவுல் செய்தது போலவே

*சரணடையும்படி உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்! "தமஸ்குவுக்குச் செல்லும் உங்கள் சாலை யானது" "சீஷத்துவத்திற்கான உங்கள் சாலையாக" முடியும்!*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

Gospel Services *என்ற நிறுவனத்தாரிடம் "பிரதான பாவிகளின் மனந்திரும்புதல்" என்ற தலைப்பில் நிழற்படப் பாடம் உள்ளது. விபரங்களுக்குப் பின்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்:* P.O. Box 262302, Houston, Tx 77207 (1-800-231-9641).

*நான் இளம் பிரசங்கியாராக இருந்த வேளையில், "பாவி யான சவுலிலிருந்து பிரசங்கியாரான பவுல் வரையில்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் தயார் செய்தேன். நான் அதைப் பிரசங்கிப்பதற்கு முன்னதாகக் கரும்பலகையில், பின்வரும் வரைபடத்தை வரைவதுண்டு:*



## பிரசங்கக் குறிப்புகள்

*ரிக் ஆட்ச்லி அவர்களால், சவுலின் மனமாற்றம் பற்றி, "வாழ்க்கை முழுவதிற்குமான ஒரு வாய்ப்பு" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்டது. சவுலின் மனமாற்றத்தின் மூன்று நிலைகளை அவர் கவனித்துள்ளார்: (1) பாவத்தைப் பற்றிய ஒரு உணர்வடைதல், (2) இயேசுவை அடையாளம் கண்டுணர்தல், (3) கீழ்ப்படியத் தீர்மானித்தல். இதற்குப் பதில் தலைப்பாக "சீஷத்துவத்திற்குச் செல்லும் சாலையில்" என்பதை யும் பயன்படுத்த முடியும்.*

*"பார்வையற்றவராயிருக்கையில் பவுல் பார்த்தது என்ன?" என்ற பிரசங்கமானது சவுலின் மனமாற்றத்தை மாறுபட்ட விதத்தில் அணுகக் கூடியதாய் இருக்கின்றது. இந்தப் பிரசங்கமானது* The Preacher's Periodical (now Truth for Today), *ஜூலை 1983 இதழில் வெளியாயிற்று.*

*சவுலின் மனமாற்றத்தில் காணப்படும் பின்வரும் நான்கு கேள்விகளை வைத்து அநேக பிரசங்கியார்கள் பிரசங்கம் செய்திருக்கின்றனர் (9:4, 5; 22:10, 16). பவுல் ரோஜர் அவர்கள் இந்த நான்கு கேள்விகளை வைத்து, "யுகங்களின் மாபெரும் கேள்விகள் - யாவும் ஒரே பக்கத்தில்" (The Preacher's Periodical, May 1985) என்ற தலைப்பில் ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்துள்ளார்.*

*பவுலின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு துணைப் பிரசங்க மானது, அப்போஸ்தலரின் வாழ்க்கை வரலாறு பற்றிய இப்பாடத்தின் முற்பகுதியிலிருக்கும் விபரங்களை எடுத்து, அவரது ஊழியம் பற்றிய சுருக்க உரையுடன் இணைத்துப் பிரசங்கிக்கப்பட முடியும். இப்படிப்பட்ட ஒரு பிரசங்கத்தை நான், பின்வரும் நான்கு முக்கியக் கருத்துக்களுடன், "ஜெயம் கொள்ளுகிறவருக்கு மேலானவர்'' (ரோமர் 8:37) என்று அழைப்பதுண்டு: (1) அவரது மனமாற்றத்தில் அவர் ஜெயங் கொள்ளுகிறவருக்கு மேலானவர், (2) கிறிஸ்தவரானதில் அவர் ஜெயங் கொள்ளுகிறவருக்கு மேலானவர், (3) ஒரு பிரசங்கி யாராக இருந்ததில் அவர் ஜெயங் கொள்ளுகிறவருக்கு மேலானவர், (4) ஒரு கைதியாக இருந்ததில் அவர் ஜெயங் கொள்ளுகிறவருக்கு மேலானவர். ஒவ்வொரு பகுதியிலும்*

நான், கிறிஸ்துவின் மூலமாகப் பவுல் தாம் எதிர்நோக்கிய தடைகள் யாவற்றிலும் - இவைகள் நாமும் கூட எதிர் கொள்ளக் கூடிய தடைகளே - “ஜெயங் கொள்ளுகிறவருக்கு மேலானவ ராக இருந்தார் என்று அவரது வாழ்வின் அந்தந்தக் காலக்கட்டத்தைத் தொடர்புபடுத்திக் குறிப்பிடுவதுண்டு.

அப். 26:18 வசனப்பகுதியானது, ஐந்து கருத்துக்கள் கொண்ட வசன ரீதியான பிரசங்கமாக, ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் என்ற முறையில் நாம் நிறைவேற்ற வேண்டிய தென்ன என்பது பற்றியும், கிறிஸ்துவுக்கு ஒரு நபர் மனம் மாறும்போது என்ன நடக்கின்றது என்பது பற்றியும் பிரசங்கிப் பதற்குப் பயன்படுத்தப்பட முடியும்.

---

குறிப்புகள்

[1]சொன்னதையே மறுபடியும் சொல்லுவது என்பது லூக்காவின் வழக்கமல்ல. பவுலின் பிரசங்கங்களைப் பதிவு செய்யத் திட்டமிட்ட அவர் பிற்பகுதியில் தரவிருந்த விபரங்களை அதிகாரம் 9ல் தராமல் விட்டுவிட்டார். வித்தியாசப்பட்ட கேட்கும் நபர்களுக்கு வித்தியாசப்பட்ட உண்மைகள் வலியுறுத்தப்பட்டதால், இந்த விபரங்கள் ஒன்றுக்கொன்று சிறிது மாறுபடுகின்றன என்பது கவனிக்கப்பட வேண்டும். இம்மூன்று விபரங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல, அவைகள் ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பவைகளேயாகும். [2]அப். 11:26 வரையிலும், இயேசுவைப் பின்பற்றியவர்கள் “கிறிஸ்தவர்கள்” என்று அழைக்கப் பட்டிருந்ததில்லை ஆனால் அவ்வப்பொழுது நான், கர்த்தருடைய சீஷர்களை வித்தியாசமான முறையில் குறிப்பிடுவதற்காக இந்தப் பாடத்தில் இச்சொற் றொடரை ஒரு முன் எதிர்பார்ப்புடன் பயன்படுத்துவேன். [3]அப். 21:39; 22:3. தர்சுப் பட்டணமானது ஒரு வர்த்தக மையமாகவும், கற்றுக் கொள்ளுதலின் ஒரு மையமாகவும் விளங்கியது, வரைபடத்தைப் பார்க்கவும். [4]சவுல் என்ற பெயர் ‘‘தேவனால் அழைக்கப்படுதல்’’ என்று அர்த்தமாகின்றது. [5]செல்வம் என்பது பின்வருபவை உட்பட அநேக உண்மைகளை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது: (1) “வளமையுடன் வாழ்ந்திருப்பது எப்படி?” என்பதைப் பவுல் அறிந்திருந்தார் (பிலி. 4:12). கிறிஸ்தவரான பிறகு அவர் இப்படிப்பட்ட வளமையான வாழ்வை மேற்கொள்ளவில்லையாகையால், அநேகமாக இது அவருடைய முந்திய வாழ்வைக் குறிப்பதாயிருக்க வேண்டும். (2) அவரது பெற்றோரால் அவரை ஒரு மாணவராக எருசலேமுக்கு அனுப்பி வைக்க முடிந்தது. (16:37; 22:25-29 ஆகியவைகளைக் காணவும்). பவுலின் குடும்பத்தார் எவ்விதம் ரோமாபுரிக் குடியுரிமையைப் பெற்றார்கள் என்று நாம் அறிவதில்லை. ஒருவேளை அவரது முன்னோர்களில் ஒருவர் ரோம அரசாங்கத்திற்கு சில விசேஷ சேவைகளைச் செய்திருக்கலாம். [6]பவுலின் எழுத்துக்கள் மற்றும் பிரசங்கங்களில், ஏறக்குறைய பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் மேற்கோள் காட்டப்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட வேதவசனக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. [7]பொருளாதார நிலை எவ்விதம் இருந்தாலும், ஒவ்வொரு யூதப்பையனுக்கும் தொழில் ஒன்று கற்றுத்

*தரப்பட்டது. ஒரு பையனுக்குத் தொழில் ஒன்றைக் கற்றுத் தரத் தவறுவதென்பது அவனுக்குத் திருடக் கற்றுத்தருவதற்கு ஒப்பாகும் என்று யூதர்கள் நம்பினார்கள். சவுல் கூடாரம் செய்பவராகப் பயிற்றுவிக்கப்பட்டார் (18:3).* [8]*அவர், "[தமது] சிறு வயது முதற் கொண்டு" எருசலேமில் வாழ்ந்திருந்ததாகவும் (26:4) அங்கேயே "போதிக்கப்பட்டு" வளர்ந்ததாகவும் (22:3) கூறினார். ஒருவேளை, ஏறக்குறைய பதிமூன்றாவது வயதில் அவர் எருசலேமுக்கு அனுப்பப்பட்டிருக்கலாம், அப்பொழுது, அவர் "நியாயப்பிரமாணத்தின் ஒரு மகன்"* (bar mitzvah) *என்று கருதப்பட்டார். சிலர் 23:16 வசனமானது பவுலுக்கு அங்கு ஒரு சகோதரி இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றதாகையால், அவர் ஒரு மாணவராயிருக்கையில் அந்த சகோதரியின் வீட்டில் தங்கியிருந்திருக்கலாம் என்று எண்ணுகின்றனர், ஆனால் 21:15, 16 வசனப்பகுதியானது அநேகமாய் அவரது சகோதரி எருசலேமில் தங்கியிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.* [9]*இயேசுவின் இப்பூமிக்குரிய வாழ்க்கையின் போது பவுல் அவரை நேருக்கு நேர் சந்தித்திருக்கவில்லை யாதலால், இயேசுவின் மூன்று அல்லது நான்கு ஆண்டு கால சொந்த ஊழிய நாட்களில் பவுல் அந்நாட்டை விட்டு வெளியே (ஒருவேளை தர்சுப் பட்டணத்திற்கு) சென்றிருக் கலாம், மற்றும் கிறிஸ்தவம் வளரத் தொடங்கியபோது அவர் (பவுல்) மறுபடியும் எருசலேமுக்கு திரும்பியிருக்கலாம் (ஆலோசனைச் சங்கத்தார் அவரைத் திரும்பவும் அழைப்பித்திருக்கக் கூடச் சாத்தியக் கூறுண்டு).* [10]*சனதெரீன் சங்கமானது மரணதண்டனை நிறைவேற்றுவதை ரோமச் சட்டமானது அடிப்படையாகத் தவிர்த்து வைத்திருந்தது (இந்த இதழில் ஸ்தேவானின் மரணம் பற்றிய குறிப்புகளைக் காணவும்), எனவே சிலர், ஸ்தேவான் யூத அதிகாரிகளால்தான் கொலை செய்யப்பட்டார், பவுல் இவ்விடத்தில் மிகைப்படும் கூற்றைப் பயன்படுத்தினார் என்று எண்ணுகின்றார்கள். ஆயினும், ரோமச்சட்டத்திற்கு எதிராக ஒரு கிறிஸ்தவரைக் கொலை செய்த அதே சனதெரீன் சங்கத்தார், நூறு கொலைகள் கூடச் செய்திருக்கலாமே. பவுலின் வார்த்தைகளுக்கு இயல்பான அர்த்தம் கொடுக்கப்பட வேண்டுமென்றால், அவர் "மனிதர்களைக் கொலை செய்பவராய்" இருந்திருக்க வேண்டும் என்பதே அந்த அர்த்தமாகும்.*

[11]*அப். 26:11. சவுல் தமஸ்குவுக்குச் செல்லு முன்பு, வேறு எந்தெந்தப் பட்டணங்களுக்குச் சென்றிருந்தார் என்பதை லூக்கா பதிவு செய்யவில்லை, ஆனால் யூதேயாவின் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் அநேக "அந்நியப் பட்டணங்கள்" இருந்தன.* [12]*ஸ்தேவானின் மரணத்தோடு சவுல் தமது செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ளவில்லை என்ற உண்மையை "கொலை செய்யும்படி" என்ற வார்த்தை யானது மறுபடியும் வலியுறுத்துகின்றது. "கொலை செய்யும்படி சீறும்" ஒரு மனிதர் 140 மைல் தூரமுள்ள ஒரு பிரயாணத்தை மேற்கொள்வதென்பது "கையால் அடிப்பதற்கு" மட்டுமே என்பதாக இருப்பதில்லை.* [13]*காய்பா.* [14]*கிறிஸ்தவத்தைக் குறிப்பதற்கு இந்தச் சொற்றொடரை முதன்முறையாக இவ்விடத்தில் லூக்கா பயன்படுத்தினார் என்று நாம் காணுகின்றோம். இது இவருக்கு மிகவும் விருப்பமான ஒரு சொற்றொடராகும் (19:9, 23; 22:4; 24:22). கிறிஸ்தவத்தை "இரட்சிப்பின் வழி" (16:17) என்றும், "கர்த்தருடைய/தேவனுடைய மார்க்கம்" (18:25, 26) என்றும் குறிப்பிடும் சொற்றொடர்கள் யோவான் 14:6ல் இயேசுவின் வார்த்தையைச் சிந்திக்கும்படி அழைக்கின்றன.* [15]*சவுல் ஒரு பரிசேயராக இருந்ததால், தம்முடன் பிரயாணம் பண்ணியவர்களிடமிருந்து அவர் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்டிருந்திருக்கலாம், இது அவர் தம்மை உள்ளாய்வு செய்துகொள்ள அதிக அவகாசத்தைக் கொடுத்திருக்கும்.* [16]*எருசலேமிலிருந்து தமஸ்குவுக்குச் செல்லும் ஒரு பாதை, கலிலேயாவின் வழியே கடந்து செல்வதாயிருந்தது. சவுல் அந்தப் பாதையில் பயணம் சென்றிருந்தால், அங்கு இயேசுவின் மாபெரும் ஊழியத்திற்கான*

*ஆதாரங்களை அநேகமாக, அவர் கண்டு (கேட்டு) இருப்பார். [17]அப். 22:6. [18]அப். 22:6. [19]அப். 26:13. [20]அப். 26:13.*

*[21]லூக்காவின் எழுத்துக்களில், கர்த்தர் ஒரு பெயரை இருமுறை அழைக்கும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், அழைக்கப்பட்ட நபர் இடர்ப்பாட்டில் இருப்பவராகவே காணப்பட்டார்! லூக்கா 10:41; 13:34; 22:31 ஆகியவற்றைக் காணவும். [22]அப். 26:14. "எபிரெய ஜென்ம பாஷை" என்பது அரமாயிக் மொழியைக் குறிப்பிடுகின்றது. கிரேக்க நூலில் இயேசுவின் இந்த வார்த்தைகளில், "சவுல்" என்பதன் எழுத்துக்கள் கிரேக்க மொழி எழுத்துக்களாயிராமல் அரமாயிக் மொழியின் எழுத்துக்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. [23]முள் என்பது சாட்டைக் குச்சியின் நுனிப்பகுதியில் உள்ள தார்முள்ளைக் குறிக்கிறது. இது வண்டியில் பூட்டப்பட்ட மாடுகளை விரட்டப் பயன்படுத்தப்படுகின்றது. மாடுகள் முரட்டுத்தனம் செய்தால் இந்த முள்ளினால் அவைகளைக் குத்துவார்கள். ஒருவேளை அச்சமயத்தில் மாடு அந்த முள்ளை எதிர்த்து உதைத்தால் அதற்கு (மாட்டுக்கு) மிகுந்த வேதனை ஏற்படும். சவுல் ஒரு கிறிஸ்தவராவதற்கே தேவன் அவரை "விரட்டிக்" கொண்டிருந்தார், அதற்காகவே இவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தன, ஆனால் அந்தச் சந்தர்ப்பம் வரையிலும் சவுல் தனக்குத் துன்பம் உண்டாக்கிக் கொள்ளும்படியாக எதிர்த்து நிற்பவராய் இருந்தார். இதைத் தொடர்ந்து செய்தால் அவர் நித்திய துன்பத்தை அடைவதாயிருக்கும். [24]உடனடியான வசனப்பகுதியில் சவுல், இயேசுவின் சத்தத்தைக் கேட்டார் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இதைப் பற்றிக் கூறும் மற்ற வசனப் பகுதிகளில், சவுல், இயேசுவைக் கண்டார் என்றும் கூறப்படுகின்றது (9:17, 27; 1 கொரி. 9:1 முதலியவை). [25]அப். 22:8. [26]சவுலுக்குள் நடந்த மிகப்பெரிய மாற்றமானது, அவர் உயிர்த்தெழுந்த கர்த்தரைத் தரிசித்தார் என்பதற்கு நிரூபணமாக இருக்கின்றது. [27]இவ்விடத்தில் சபையின் உறுப்பினர்களுக்கு சொந்தப் பயன்பாடுகள் மேற்கொள்ளப்பட முடியும்: கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமது சகோதர சகோதரிகளை நாம் தவறாக நடத்துகின்றபோது, நாம் கிறிஸ்துவையே தவறாக நடத்துகின்றோம்! [28]இயேசு சவுலுக்கு மற்ற சில முறைகளும் தரிசனமானார் (18:9, 10; 22:17-21; 23:11; மற்றும் 2 கொரி. 12:1-4, 7 ஆகியவற்றையும் காணவும்). [29]இது, அப்போஸ்தலர்களுக்கு 1:8ல் கொடுக்கப்பட்டிருந்த அதே அறைகூவலாகும். [30]தெய்வீகப் பாதுகாப்பு என்ற இந்த வாக்குத்தத்தமானது, சவுல் சுவிசேஷத்தைப் பரப்புகையில் கொண்டிருந்த வியக்கத்தக்க தைரியத்தில் பெரும் பங்காற்றியது என்பதில் சந்தேமில்லை.*

*[31]சிலர், 26:16-18 வசனப்பகுதியானது, இயேசுவானவர் சவுலினிடத்தில் நேரடியாகவும், அனனியாவின் மூலமாகவும் கூறிய எல்லாவற்றின் சுருக்கத் தொகுப்பாகும் என்று நம்புகின்றார்கள்: ஆயினும், அகிரிப்பாவின் முன்பாகப் பவுல் பேசியவைகளிலிருந்து, இவை எல்லாவற்றையும் சாலையில் அவர் தரிசனமான பொழுது இயேசு எல்லாவற்றையும் சவுலுக்குக் கூறியதாகச் சுட்டிக் காட்டப் படுவதால், பாடத்தின் இந்த இடத்தில் நான் இதை உள்ளடக்கியிருக்கின்றேன். [32]"வேண்டியது" (must) என்பது பலமான ஒரு வார்த்தையாகும். செய்யும்படி சவுலுக்குக் கூறப்படப் போவது அவரது விருப்பத் தேர்வாக இருக்கப் போவதில்லை. [33]உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனம் சவுலின் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது (1 கொரி. 15:8). [34]சவுலுடன் பிரயாணம் செய்தவர்களின் நிலையில் முரண்பாடுகளைக் காண்பதற்கு விமர்சகர்கள் முயற்சி செய்திருக்கின்றார்கள்: "அவர்கள் விழுந்தார்கள், ஆனால் அவர்கள் நின்றார்கள்; அவர்கள் கேட்டார்கள், ஆனால் அவர்கள் கேட்கவில்லை." இதில் முதலாவது நிலை பற்றியது: அவர்கள் விழுந்து பிறகு எழுந்து நின்றிருக்கலாம் அல்லது "பேச்சற்று நின்றிருக்கலாம்" என்பது ஒரு உருவக நடையில் ("அதற்காக நான் நிற்க மாட்டேன்" என்பது போன்ற) கூற்றாக இருக்கின்றது. இரண்டாவது நிலை பற்றியது:* NASB *வேதாகமத்தில் அநேகமாகச்*

*சரியான கருத்து உள்ளது: அவர்கள் ஒரு குரலின் சத்தத்தைக் கேட்டார்கள், ஆனால் அந்தக் குரல் கூறியது என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாமலிருந்தார்கள் (இதே போன்ற இன்னொரு நிகழ்ச்சியை யோவா. 12:28, 29ல் காணவும்).* [35]*அப். 22:11.* [36]*இன்றும் தமஸ்குவில் அந்தத் தெரு இருக்கின்றது. அது ஏறக்குறைய ஒரு மைல் நீளமும், (அந்தப் பழங்கால நகரத்தில் இருந்த குறுகலான, கோணல் மாணலான தெருக்களுக்கு முரண்பாடான வகையில்) ஐந்து இலேசான வளைவுகள் மட்டும் கொண்டதாக இருக்கின்றது.* [37]*இவ்விடத்தில்தான் சவுல் இயேசுவை "ஆண்டவரே" (9:5; 22:8) என்று முதன்முறையாக அழைத்தார், ஒருவேளை இது மரியாதைக்குரிய பட்டமாக இருந்திருக்கலாம், ஏனென்றால் அவர் யார் என்பதை சவுல் அறிந்திருக்கவில்லை. ஆயினும், இரண்டாந்தரம் அவர் ஆண்டவரே (22:10) என்றபோது தம்முடன் பேசுபவர் யார் என்று அறிந்து சொன்னதால் - அவர் இயேசுவை "ஆண்டவர்" என்று அவ்விடத்தில் அறிக்கை செய்தார்.* [38]*இரட்சிக் கப்பட என்ன செய்ய வேண்டும் என்ற தேவனுடைய திட்டத்தை மனிதர்களே மனிதர்களுக்குக் கூற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும் (எனவே தான், என்ன செய்ய வேண்டும் என்பதை இயேசு சவுலுக்குக் கூறவில்லை). இந்த உண்மையானது மந்திரியின் மனமாற்றத்தில் வலியுறுத்தப்பட்டது, கொர்நேலியு வின் மனமாற்ற நிகழ்ச்சியைப் படிக்கையிலும் இது வலியுறுத்தப்படும்.*




*சவுலின் தொடக்க காலப் பிரயாணங்கள்*

1. சவுல் ❶ எருசலேமை விட்டு, ❷ தமஸ்குவுக்குப் புறப் பட்டுச் செல்லுதல் - கிறிஸ்தவர்களைப் "பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறுதல்" (9:1; 22:5; 26:12).
2. சவுல் ❷ தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் இயேசுவைத் தரிசித்து, நகருக்குள் நுழைதல், அங்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி அனனியாவி னால் கூறப்படுதல். உடனடியாக சவுல் பிரசங்கிக்கத் தொடங்கினார் (9:20-22).
3. சவுல் ❸ அரபியாவிற்குத் திரும்புதல் (கலா. 1:17) பின்பு ❷ தமஸ்குவுக்கு மறுபடியும் திரும்பி வருதல். யூதர்களின் கோபத்திலிருந்து தப்பிப்பதற்காக இரவு நேரத்தில், ஒரு

கூடைக்குள் வைக்கப்பட்டுத் தப்பிச் செல்லுதல் (அப். 9:23-25) பிறகு அவர் ❶ எருசலேமுக்கு செல்லுகின்றார். அங்கு அவர் பர்னபாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பேதுருவையும் யாக்கோபுவையும் சந்திக்கின்றார் (அப். 9:26-28; கலா. 1:18, 19).

4. யூதர்களால் மறுபடியும் பயமுறுத்தப்பட்டபோது, சவுல்/பவுல் ❹ செசரியாவுக்கு சகோதரர்களால் அழைத்துச் செல்லப்பட்டார், அங்கிருந்து அவர் ❺ தர்சுப் பட்டணத்திலிருந்த வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார் (9:29, 30).
5. பவுல் சுமார் ஏழு ஆண்டுகள் தமது வீட்டில் இருக்கையில், சிலிசியா மற்றும் சீரியா நாடுகளில் பிரசங்கித்தார் (கலா. 1:21). பர்னபா சவுலைத் ❺ தர்சுப் பட்டணத்திலிருந்து ❻ அந்தியோகியாவுக்கு அழைத்து வந்தார், அங்கு அவரும் சவுலும் ஒரு ஆண்டளவு ஊழியம் செய்தனர் (அப். 9:19-25).

---

## புதிய ஏற்பாட்டு உலகத்தின் பட்டணங்கள்

“தர்சுப் பட்டணம் அமைந்துள்ள சமவெளியானது வடக்கிலும், வடமேற்கிலும் உயர்ந்து நிற்கும் மலைத் தொடர்களை எல்லைகளாகக் கொண்டிருந்தது, அவைகளில் ஆண்டின் பெரும்பகுதி பனி மூடியிருக்கும். இம்மலைத் தொடர்களுக்கு அப்பால் ஒரு வாசல் இருந்தது, அது சிலிசியாவின் வாசல் என்று அழைக்கப்பட்டது, ஏனென்றால் மேற்குத் திசையிலிருந்து சிலிசியாவுக்குள் வரக் கூடிய ஒரே வழியாக அது இருந்தது. சிலிசியாவின் கிழக்குப்பகுதியில் இருந்த இன்னொரு மலைத் தொடரின் வழியே நன்கறியப் பட்ட இரண்டு பாதைகள் சீரியாவுக்கு வழித் தடத்தை ஏற்படுத்துபவைகளாயிருந்தன.

*New Commentary on Acts*
J.W. McGarvey

“[தமஸ்குப்பட்டணம்] மலைகளால் சூழப்பட்டதாகவும், முனைகளில் பாலைவனங்கொண்டதாகவுமிருந்தது, அத்துடன் மைல் நீளமுடைய தோட்டங்களின் ஊடாகச் செல்லும் பெரு நீரோடை மற்றும் கணவாய் ஆகியவற்றில் வியாபாரப்

*படகுகள் மற்றும் உல்லாசப் படகுகள் போக்கும் வரத்துமா யிருந்தன. அதன் சாவடிகள், அங்காடிகள் மற்றும் சந்தைச் சதுக்கங்கள் ஆகியவற்றில் பட்டு, வைரம், தந்தம், கம்பளம், வாள்கள் ஆகியவை நிறைந்திருந்தன; தாகமுள்ள பயணிகள், லீபனோன் மலையின் பனியினால் குளிரூட்டப்பட்ட எலுமிச்சைச் சாற்றினால் தங்களின் தாகத்தைத் தணித்துக் கொண்டார்கள். அதன் சுவர்கள் மற்றும் கோபுரங்கள் ஆகிய வற்றில் கனத்த வளைவுகளும் வாசல்களும் பதிக்கப்பட்டிருந் தன, இவைகளில் ஒன்றான கிழக்கு வாசலின் வழியாகத்தான் சவுல் வழிநடத்தப்பட்டுச் சென்றார்.*

*Spreading the Gospel*
Bernard R. Youngman

*“[தமஸ்குப் பட்டணம்] விரிவான ஒரு வியாபார வலைப் பின்னல் பகுதியின் மையமாக விளங்கியது, அதன் வழியாகவே தூரத்திலிருந்து வரும் வியாபார நோக்குடையவர்கள் ஒட்டகக் கூட்டங்களில் அழகாக அணிவகுத்து வடக்கு சீரியா, மெசப் பொத்தாமியா, அனத்தோலியா, பெர்சியா மற்றும் அரபியா ஆகிய நாடுகளுக்குச் செல்வார்கள். கிறிஸ்தவத்தின் ‘‘புது’’ வழியானது தமஸ்குவில் சனதெரீன் சங்கத்தார் மற்றும் துன்பப்படுத்துவதில் தலைவனான சவுல் ஆகியோரின் கண்ணோட்டத்தில், அது (கிறிஸ்தவம்) தமஸ்குவில் தடை செய்யப்பட வேண்டியதாயிருந்தது.*

*The NIV Study Bible*

*‘‘பெனிக்கிய அஸ்திபாரமுள்ள இடத்தில், பெரிய ஏரோதினால் செசரியா பட்டணம் கட்டுவிக்கப்பட்டது ... ஏரோதின் அரசில் அது முக்கிய துறைமுகமாகும்படி, அவ்விடத்தில் மிகச் சிறந்த செயற்கைத் துறைமுகமொன்று நிர்மாணிக்கப்பட்டது. செசார் அகுஸ்துராயனைக் கௌர விக்கும் விதத்தில் அந்தப் புதிய நகரத்தை ஏரோது, செசரியா என்று அழைத்தார். கி.பி. 6க்குப் பிறகு அது யூதேயாவை ஆளக்கூடிய ரோம ஆளுநர்களின் தங்குமிடமாயிற்று, அவர்கள் தங்கள் அலுவலக தலைமையகங்களை ஏரோது அரண் மனையிலே நிலைநாட்டிக் கொண்டார்கள்* (cf. *23:35).”*

*The Book of Acts, rev. ed.*
F.F. Bruce